


March - 2012

Free Edition

# ஜோதி
ஆன்மிகச் செய்திச்சுடர்

Jothi

Spiritual Newsletter

ஜோதி 6: சுடர் 01 - 61

மூல மந்திரம்

ஓம் சக்தியே
பராசக்தியே
ஓம் சக்தியே
ஆதி பராசக்தியே
ஓம் சக்தியே
மருவூர் அரசியே
ஓம் சக்தியே
ஓம் விநாயகா
ஓம் சக்தியே
ஓம் காமாட்சியே
ஓம் சக்தியே
ஓம் பங்காருகாமாட்சியே
*

அருள்திரு அம்மாவின்



72ஆவது அவதாரத்திருநாளில்
அம்மாவின் அருளாசி வேண்டும்
அவுஸ்திரேலிய – நியுசிலாந்து
செவ்வாடை சக்திகள்

## தரணியில் ஓர் தனிப்பெரும் சற்குரு அடிகளார்

### ஆன்மிகம் ஏன்?

"Let the world be little with you;
Let you be on the parth of spirituality"

ஆங்கிலத்தில் 'இமயமலை ஞானிகளுடன் வாழ்தல்' என்ற நூலினை இயற்றிய சுவாமி ராமா அவர்களுக்கு முன் அறிமுகம் இல்லாத ஒரு ஞானி கொடுத்த செய்தி இது. சமுதாயத்தின் முதுகெலும்பே ஆன்மிகம்தான். ஒரு நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் நிலைத்து நிற்க ஆன்மிக வளர்ச்சி தேவை. ஆன்மிக வளர்ச்சி குறைந்தால் இவை அழிந்து விடுகின்றன. மனிதனுக்கு வேண்டியது கடவுளை மையமாகக்கொண்ட வாழ்க்கையே. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றார் ஔவையார்.

ஆன்மிகச் சிந்தனையால் நேரிடும் துன்பங்களை நீக்கி அமைதியைப் பெறுவது என்பதே இந்து சமயத்தின் சீரிய தத்துவம். மனிதனது ஏழு நிலைகளிலும் ஆன்மிக உணர்வு சாத்தியமாகும். மனிதனுடைய ஒரே கடமை இறைவனை உண்மையாக நேசிப்பது மட்டுமே. கடவுளிடமிருந்து வந்திருக்கிறோம், அவரிடமே சென்று அடைய வேண்டும் தெய்வமாவதும், சாத்தான் ஆவதும் அவன் அவன் கையில்தான் இருக்கிறது. மனிதன் தன் பிறவியின் நோக்கம் உணராது, ஆன்மிகத்தை விட்டு விலகிச் செல்வதாலும், பொருளீட்டுதலையே முக்கிய கடமையாகக் கொண்டு, தன் புத்தியை மட்டுமே நம்பி, ஆசைகள் என்ற இறக்கைகள் கொண்டு பறக்க விரும்புவதால் வாழ்க்கையில் தோல்விகளையும், ஏமாற்றங்களையும் சந்திக்கிறான்.

முனைவர் ஆண்டாள் இராமலிங்கம்M.A., M.Ed., Ph.D.
கல்வியியல் பேராசிரியர் (ஓய்வு)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - அண்ணாமலை நகர்

மனிதனின் அதர்மமான வாழ்க்கையே உலகில் காணப்படும் பஞ்சம், வெள்ளம், புயல், சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்கள், வன்மை, மதவெறி, இனவெறி, இரத்தவெறி, கலகம் போன்ற சீர்கேடுகள் இவற்றிற்கெல்லாம் காரணம்.

(தொடர்ச்சி 02ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

"அடிகளார் பார்வைக்குள்ள தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.
அடிகளாரோடு பேசுகிற வாய்ப்பும் இனி கிடைக்காமல் போகிற நிலை உண்டாகும்"

'Jothi' Newsletter Published from Melmaruvathur Adhiparasakthi Medical …... – Australia

சுடரில்…..

**தரணியில் ஓர் தனிப்பெரும் சற்குரு அடிகளார்**

பக்கம் - 1-5

□□□

UPCOMING EVENTS

Melbourne – Pg 6, 7
Sydney _ Pg 15
Brisbane _ Pg 13

□□□

**திருமதி அம்மா பதில்கள்**

பக்கம் : 14

□□□

**அருள்வாக்கும் அனுபவங்களும்..**

பக்கம்: 9, 11, 13

□□□

**Divine Miracles**

Pg: 16

□□□

ஆன்மிக நாட்குறிப்பு

பக்கம் : 12

□□□

**சித்தர் பீட ஆலய விழாக்கள்**

பக்கம் - 10

## தரணியில் ஓர் தனிப்பெரும் ….

“படித்த வேதங்களோ, புராண இதிகாசங்களோ, வளர்த்த திறமைகளோ, கற்றறிந்த அறிவியல் அறிவோ சாகும் தருவாயில் இருக்கும் மனிதனுக்கு உதவுவதில்லை. கட்டிய மனைவிகூட அருகில் வர அஞ்சுவாள். உலகப் பற்றுக்கள் தற்காலிகமானவை. நிரந்தரமான ஒரே துணை இறைவன் மட்டுமே” என்று ஆதிசங்கரர் பஜகோவிந்தத்தில் பாடியிருக்கிறார்.

நாம் பூஜ்யங்களைப் போட்டுக்கொண்டே போகலாம். பூஜ்யத்திற்கு முன் ஒன்று’ என்ற எண்ணைப் போட்டால் மட்டுமே அதற்கு மதிப்பு வருகிறது. உலகப் பொருட்கள் எல்லாம் பூஜ்யங்களைப் போன்றவையே. பரம்பொருள் என்ற ‘ஒன்று’ இருந்தால் மட்டுமே வாழ்க்கை வாழும் தன்மையைப் பெறுகிறது. இல்லையேல் வாழ்க்கையே பெரும் பாரமாகிவிடுகிறது. பாதுகாப்பற்ற புதியதோர் யுகத்தை நோக்கிப்போய்க்கொண்டிருக்கும் மனித வர்க்கத்தைப் பாதுகாக்க ஆன்மிகம் தேவை.

### குருவின் அவசியம்

ஒவ்வொரு மனிதனுக்கும் உலக முகம், ஆன்மிக முகம் என்ற இரண்டு முகங்கள் உண்டு. முதலாவது பெற்றோர்கள் வளர்ப்பின் காரணமாக அமைவது. ஆன்மிக முகமோ ஞானி ஒருவரின் போதனையின் பலனாக அமைவது. உடல் வளர்ச்சியைவிட ஆன்மிக வளர்ச்சியே மிக முக்கியம். உலகில் தீவிரவாதமும், தீய சக்திகளும் அதிக அளவில் இருக்கும்போது, அவற்றின் பிடியிலிருந்து தப்பி, நல்லதோர் ஆன்மிக வாழ்க்கை வாழ தேவை குருவே. ‘குரு’ என்ற வார்த்தையே மிக உயர்ந்ததும், அதிசயமானதுமாகும். மரியாதை, புனிதத்தன்மை, உயர்ந்த ஞானம் இவற்றோடு தொடர்புடைய வார்த்தை இது. ‘கு’ என்பது இருளையும், ‘ரு’ என்பது வெளிச்சத்தையும் குறிக்கும் ‘தேவா’ என்ற அடைமொழியும் உண்டு. முற்றும் தெளிந்த ஞானியே குருதேவா, ஆன்மிகப் பயணம் என்னும் ஏணியின் முதல்படி குருவே. வாழ்க்கைக் குறிக்கோளை நிறைவேற்றத் துணையாயிருப்பவர் குரு. உலகில் எல்லாவற்றையும் பெற்றிருந்தாலும், குருவின் பாதம் நம் தலை மீது இல்லாது போனால் பயன் எதுவும் இல்லை.

“so What if you possess everthing in this world,
If your guru’s feet are not on your head”-என்பது ஞானியின் வாக்கு.

சீடனாக விரும்பும் ஒருவன் தனது குருவாக ஏற்க இருப்பவரிடம் ஒரு குச்சிக் கட்டினைக் கொடுக்கிறான் ஏன்? குருவுக்குத் தங்கம், வெள்ளி, பணம் இவையெல்லாம் ஒரு பொருட்டல்ல. இந்தக் குச்சிகளைக் கொடுப்பதன் மூலம் சீடன் ஆன்மிகப் பாதையில் அடி எடுத்து வைக்கத் தான் தயாராக இருக்கும் நிலையை உணர்த்துகிறான். அதற்குப் பொருள் தன்னை கர்ம வினைகளிலிருந்து விடுவித்து, தன்னுடைய எதிர்மறையான எண்ணங்களை அறிவாகிய நெருப்பில் எரிக்க வேண்டும் என்பது, குருவும் இந்தக் குச்சிகளை எரித்து சீடனிடம் எதிர்காலத்தைப் பாதிக்காத வண்ணம் அவனது கர்மவினைகளிலிருந்து விடுவிப்பதோடு, ஆன்ம சுதந்திரம் அடைவதற்கான புதிய வாழ்வினையும் தருவதாகப் பொருள்படும்.

ஆன்ம சுதந்திரம் ஒரு குருவின் வழிகாட்டலால் மட்டுமே சாத்தியமாகும். வேதங்களும் புராணங்களும், ஆன்மிகப் பாதைக்கு வழிகாட்டினாலும், குரு மட்டுமே ஆன்ம சுதந்திரத்தை அளிக்க வல்லவர். உன்னதமான மனிதருக்கும் தேவை. சிவபெருமானே தனது மகனான முருகனிடம் சீடராக இருந்து மந்திர உபதேசம் பெற்றது நாமறிந்த உண்மையே.

(தொடர்ச்சி….3ஆம் பக்கம்)

## தரணியில் ஓர் தனிப்பெரும் ....

பாற்கடலைப் பார்க்க ஒரு கவிஞர் வந்தார். விஷ்ணு தன்னைப் பார்க்க வந்திருக்கலாம் என நினைக்க, அவரோ பாற்கடலை அளந்து பார்க்க வந்ததாகச் சொன்னார். பாற்கடல் பெரியதுதான். ஆனால், தான் பல பிறவிகளில் பிறந்து குடித்த பாலின் அளவைவிடச் சிறியது என்றார். அவரது வார்த்தைகளின் பொருள் அவருக்குப் புரியவில்லை. ஆன்ம சுதந்திரம் பெறாது, பல பிறவிகள் எடுத்த அவல நிலையையே அவரது கூற்று நிரூபித்தது. குருவிடம் கல்வி கற்றலும், அவரது வழிகாட்டுதலும் அவசியம். பல பிறவிகளைத் தடுத்து ஆன்ம விடுதலை அளிப்பவர் குருவே.

ஒரு குரு குலத்தில் தவம் செய்யும் ஒருவரும், புகழ்பெற்ற ஒரு ஞானியும் இருந்தார். தவம் செய்தவரின் மகன், இரு வழிகளையும் இணைத்துக் குறுக்கு வழியில் முன்னேற நினைத்தான். இந்திரனை நோக்கிக் கடும் தவம் செய்ய, அவரும் தோன்றினார். அவரிடம் படிக்காமலே வேதம், இதிகாசம் இவற்றைப் பற்றிய அறிவு தனக்கு வேண்டும் என்றான். இது ஒரு ஆற்றில் கையளவு மணலைக் கொண்டு அணை கட்டுவது போல் ஆகும் என்று இந்திரன் கூறியும் அவன் விடுவதாக இல்லை. இந்திரனும் விருப்பமில்லாது அவன் கேட்ட வரத்தை அளித்தான்.

இறுதியில் அவன் குடும்பம், வாழ்க்கை எல்லாவற்றையும் இழந்து நிற்க, ஞானியின் மகன் தான் தன் குருவிடம் பெற்ற போதனைகளின் அடிப்படையில் உதவி செய்து கரை சேர்த்தான்.

இன்றைய உலகில் காணப்படும் சிக்கல்களை எல்லாம் தீர்க்க மக்களுக்கு வேண்டுவது ஒரு கருவி, சோதிடர்கள், எண் கணித சோதிடர்கள், தினப்பலன், வாரப்பலன், மாதப்பலன் சொல்லும் பத்திரிகைகள் புத்தகங்கள் இவற்றைத் தேடி மக்கள் செல்லும் காரணமும் இதுவே. சோதிடர் கூறும் பரிகாரங்களையும் தவறாமல் செய்து எப்படியாவது சிக்கல்கள் தீர்ந்து முன்னேற நினைக்கிறார்கள். சிலர் வேத, புராண இதிகாசங்கள் படிப்பதும் தான தர்மம் செய்வதும் உண்டு. இறை நம்பிக்கையற்றுச் செய்யப்படும் இச்செயல்கள் எந்த நிரந்தரத் தீர்வையும் அளிப்பதில்லை. மக்களது திறமைகள் வேறுபடுவதுபோல் அவர்களது ஆன்மிகப் பரிணாம வளர்ச்சியும் மாறுபடுகிறது. ஆன்ம விடுதலையடைய நெடுங்காலமாவதால், குருவின் வழிகாட்டுதல் மிக மிக அவசியம்.

நல்ல சுத்திகரிக்கும் பொருள் கொண்டு ஒரு அழுக்குக் கண்ணாடியைச் சுத்தம் செய்தால், எல்லாப் பொருட்களும் அதில் பிரதிபலிப்பதுபோல நம் மன அழுக்குகளை அகற்றி மெய்ஞானம் புகட்டிட ஒரு குரு அவசியம்.

### குருவும் கடவுளும் ஒன்றே

“ஆன்மாக்களை உய்விக்கப் பரம்பொருள் உருவம் தாங்கி வருவதுண்டு. குருவடிவில் வருவதுண்டு” என்று சைவ மதம் நம்புகிறது. “இறைவனே ஒரு உருப்பெற்று குருவாக வந்தாலன்றி சித்தி, முத்தி, வேதாந்த ஞானம் அறிந்துகொள்ள இயலாது” என்பது திருமூலர் கருத்து.

> “கடவுளிடம் சீரிய பக்தியும் அதே
> தன்மையதாம் பக்தியைக் குருவிடத்தும்
> கொண்டுள்ளதோர் மாபெரும்
> மகாத்மாவுக்கே உபநிடத உண்மைகள்
> படிகம்போல் தெளிவாகத் தெரிகின்றன”

என்ற கூற்றின் மூலம் பகவான் கிருஷ்ணரே குருவும், கடவுளும் ஒன்றே எனத் தெரிவிக்கிறார். எனவே குருவார்த்தையும், இறைவார்த்தையும் ஒன்றே.

### அடிகளார் ஆதிபராசக்தியின் வெளிப்பாடே

‘ஒவ்வொரு யுகத்திலும் இந்த உலகில் கடவுள் மனித உருவில் தோன்றுகிறார்’ என்பது இராமகிருஷ்ணரது கருத்து. இராமர் உலகில் அவதரித்தபோது அவர் ஈஸ்வர அவதாரம் என்பது ஏழு ரிஷிகளுக்கு மட்டுமே தெரியுமாம். பரத்வாஜ முனிவர் இராமரிடம் இதைப்பற்றி கூறியிருக்கிறார். மனித சமுதாயத்தை நெறிப்படுத்த மனிதத் திருமேனி தேவைப்படுகிறது.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## தரணியில் ஓர் தனிப்பெரும் ....

சக்தி உபாசகரும், ஞானியுமான காஞ்சி பெரியவரே ''அடிகளார் அம்பாளின் ஸ்தூல வடிவம்'' என்றார். பக்தர்களுக்குச் சூக்கும உடலில் அடிகளார் அருள்வாக்கு கூறும்போது தெய்வ ரகசியங்கள், பிறவி ரகசியங்களைக் கூறுகிறார். இது தெய்வப் பிறவியாக இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். விவேகானந்தர், வள்ளலார் இவர்களைப் போல ஆன்மிகம் பரப்ப பரம்பொருளே தேர்ந்தெடுத்த பிரதிநிதி அடிகளார், ஆதிபராசக்தி கண்டெடுத்து, ஆட்கொண்ட திருமேனி.

ஏசுபிரான் மக்களைக் குணப்படுத்தியபோது அவரைத் தெய்வம் என்றார்கள். அவரோ எல்லாம் தன் தந்தையின் கருணை. அவர் கையில் தான் ஒரு கருவியே என்றார். 'என்னை அனுப்பிய தந்தையே ஈர்த்தாலொழிய யாரும் என்னிடம் வர இயலாது' என்றும், 'நானும் என் தந்தையும் ஒன்றே' என்றும் கூறியிருக்கிறார். அடிகளார் அவர்களும் பல சித்தாடல்கள் மூலம் ஆதிபராசக்தியின் அவதாரம் என்பதை விளக்கி இருந்தபோதிலும்,

'மேலிடத்து உத்தரவு வருகிறது, செய்கிறோம். நான் சாதாரண மனிதன் சார்''
-என்று பரம்பொருளின் கருவியாக இருக்கும் நிலையை விளக்குகிறார். தாயும் பாலகனும் ஒன்றே.

அடிகளார் இயற்கையைக் கட்டுப்படுத்துவதை நாம் அறிந்து இருக்கிறோம். அவர் வானத்தைப் பார்க்க மழை நிற்பதும், வேள்விகள் நடத்த மழை பொழிவதும், கடுங்குளிரைப் போக்கி சீதோஷ்ணநிலையைச் சரி செய்வதும் இவர் பராசக்தியின் அவதாரம் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

தீவிரவாதமும், தீய சக்திகளும் நிறைந்த இன்றைய உலகில் மருவூரை ஞான பூமியாக்கி ஆன்மிக சமுதாயம் உருவாக்கி, மருவூரை அகில உலக ஆன்மிக சமுதாயமாக உருவாக்கி, மருவூரை அகில உலக ஆன்மிக மையமாக உருவாக்கி வருவது அவதார நோக்கம் கொண்டு வந்துள்ள அன்னையின் பேரருளால் மட்டுமே சாத்தியமாகும். மனிதனும் தெய்வமாகலாம் என்ற கூற்றுக்குச் சாட்சிப் பொருளாக விளங்குபவர் அடிகளார்.

### ஆன்மிக குருவாக அடிகளார்

குருவானவர் சீடனது மனதைப் பக்குவப்படுத்தி, ஒருமுகப்படுத்தி அவன் உள்ளிருக்கும் குருவை நோக்கிச் செலுத்துகிறார். அவனுடைய மனதை ஊடுருவிச் செல்லும் திறமையும் குருவுக்கு உண்டு. மந்திர உபதேசமும் செய்கிறார் அடிகளார்.

''நிலத்தைப் பக்குவப்படுத்தி பயிர் வளர்ப்பது போல் உங்கள் மனத்தைப் பக்குவப்படுத்தி ஆன்மிகப்பயிரை வளர்த்து வருகிறேன். அந்த மனப் பக்குவத்தை நீங்கள் அடைவதற்காகவே 108, 1008 மந்திரங்களைக் கொடுத்திருக்கிறேன்'' என்றும் ''மனிதப் பக்தர்களை மனித மணிகளாக்க வந்திருக்கிறேன்'' என்றும் கூறுகிறார்.

ஆணவமும், கர்வமும் ஆன்மிகப் பயணத்தில் மிகப் பெரிய தடைக்கற்கள். குரு தன் சீடனைப் பாத்திரம், துணி, இருப்பிடம் இவற்றைச் சுத்தம் செய்தல், உணவு தயாரித்தல் எனப் பல சேவைகளைச் செய்யச் செய்து ஆணவம், கர்வம் நீங்க வழி செய்கிறார். அடிகளார் தன் பக்தர்களுக்குத் தியானம், பக்தி, தொண்டு, தர்மம் என்பவை மூலம் ஆணவம், கர்வம், அறியாமை இவற்றை நீக்கி ஆதிசக்தியோடு ஐக்கியப்படுத்தி வைக்கிறார்.

''குருவும் கோவிந்தனும் என் முன் நிற்கிறார்கள். யாரைப் பணிந்தேத்துவது. கோவிந்தனைக் காண்பித்த குரு வாழ்க'' என்று கூறி கபீர்தாசர் தனது குருவையே முதலில் வணங்கினார். அடிகளார் என்ற குரு அருளால் நாமும் திருவருள் பெறுகிறோம்.

எல்லா மனிதர்களும் குருவாக முடியாது. பரம்பொருளின் கருவியாக இருப்பவர் மட்டுமே தலை சிறந்த குரு. ஆதிபராசக்தி உலகில் ஆன்மிகம் தழைக்க, ஆன்மிக இயக்கத்தில் காலத்திற்கேற்ப புதுமை, மாற்றம் இவற்றைச் செய்ய அடிகளாரை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது செவ்வாடைத் தொண்டர்களாகிய நாம் அறிந்த உண்மை.

(தொடர்ச்சி…5ஆம் பக்கம்)

## தரணியில் ஓர் தனிப்பெரும் ....

ஆரம்பத்தில் குறிப்பிட்ட சுவாமி ராமா அவர்களை அவரது குரு தொட்டவுடன் அவருக்கிருந்த பயமும், சுயநலப்போக்கும் மாறி மன அமைதி கிடைத்ததாம். மேலும் தான் வெகு தூரத்தில் இருந்தபோதும் குருவின் உதவிகளைப் பெற்றதாகவும், அவரோடு பேசாமலே அருகில் இருக்கும்போது அருட்கண்ணால் பார்க்கவும், உட்செவியால் கேட்கவும் முடிந்ததாகக் கூறுகிறார். அடிகளார் அவர்கள் மருத்துவர்களால் கைவிடப்பட்ட பல்லாயிரக்கணக்கான நோயாளிகளை வேப்பிலையால் மந்திரித்தும் தன் கைகளால் தொட்டும் குணப்படுத்தி இருப்பது நாம் அறிந்ததே. அடிகளார் அவர்கள் நம்மிடம் பேசாமலே வலம் வரும்போது அவரைப் பார்த்தவுடன் நாம் பேரானந்தத்தையும், மன அமைதியையும் பெறுவதோடு, நமது பயம், சந்தேகங்கள் மறைவதோடு, நமது சிக்கல்களுக்குத் தீர்வுகளும் கிடைக்கின்றன. குரு தரிசனமும் பாத பூசையும் இப்பிறவியில் நாம் பெற்ற பேறு.

கடவுள் வெகு தூரத்தில் இல்லை. எங்கும், எப்பொருளிலும் நீக்கமற நிறைந்திருக்கிறார் என்ற உண்மையை உணர்த்தி, கடவுள் காட்சியை மறைத்து நிற்கும் அறியாமை என்னும் திரையை அகற்றி, கோடானுகோடி மக்களுக்கு வழி காட்டும் மிகப்பெரிய ஆன்மிகக் குருவாக அடிகளார் விளங்குவதால், அறிவியல் வல்லுநர்களும், மருத்துவர்களும், பொறியியல் மேதைகளும், மகளிரும் குழந்தைகளும், ஜனாதிபதி, பிரதமர், மந்திரிகள், சபாநாயகர் எனப் பல அரசியல்வாதிகளும் அவரது திருமுடி அன்னை ஆதிபராசக்தியிடம் இருப்பதால் அவரது திருவடி தரிசனம் காண ஞான பூமியாம் மருவத்தூர் மண்ணிலே தவம் கிடக்கிறார்கள்.

**முடிவுரை:**
ஸ்ரீஇராமனுஜரின் சீடர் கூரத்தாழ்வார் தன் குருவுக்காகத் தன் கண்களையே தியாகம் செய்தவர். ஏன்? குருசேவையே மிகச் சிறந்த வரப்பிரசாதம். சூழ்ந்துள்ள பக்தர் கூட்டத்தில் உண்மையான பக்தனைத் தன் கருணைக் கண்களால் துழாவி அம்மா நோக்குவார்கள். அந்த அருட்பார்வைக்கு நாம் பாத்திரமாகமாட்டோமா என்ற ஏக்கம் நமக்கு வேண்டும்.

“சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்
அவனை வழிபட்டு அங்கு ஆமாறு ஒன்றில்லை
அவனை வழிபட்டு அங்கு ஆமாறு காட்டும்
குருவை வழிபடின் கூடலும் ஆமே!” - **திருமூலர்**

ஓம் சக்தி!

## சமூகத்தொண்டு

## அவுஸ்திரேலிய சுத்திகரிப்பு தினம் - 2012
## Australia Clean up Day 2012

Site Address: Mons Pde & Douglas St - Noble Park, VIC 3174

**Meeting Point: 12 Ian Street Noble Park**

Date: March 4th 2012
ஞாயிற்றுக்கிழமை

காலை 8.30 மணி முதல் பகல் 1.30 மணி வரை
**Start time: 08:30 AM – End time: 01:30 PM**

http://www.cleanupaustraliaday.org.au/Around+Noble+Park+Station

# Melbourne - Mandrams – Upcoming Events – March 2012

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram

மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்
(Reg. No. 2193)
விக்டோரியா – அவுஸ்திரேலியா

மன்ற தொலைபேசி: 0434648416
(மன்றம் வழிபாட்டிற்காகத் திறந்திருக்கும் காலம் மட்டும்)

**March மாசி - பங்குனி**

Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0411881024, 0433440194, 0417113082

| | | | | |
|---|---|---|---|---|
| 01.03.2012 | Thursday | மாசி | 18 | 7.00p.m. – 8.00p.m. |
| 02.03.2012 | Friday | மாசி | 19 | 7.00p.m. – 8.00p.m. |
| 03.03.2012 | Saturday | மாசி | 20 | ஆன்மிக குரு அருள்திரு அம்மாவின் 72ஆவது அவதாரத்திருநாள் பாத பூஜை, கூட்டு வழிபாடு 6.00p.m. – 8.00p.m. |
| 04.03.2012 | Sunday | மாசி | 21 | **Joint Prayer –** "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு **6.00p.m. – 8.30p.m.** |
| 05.03.2012 | Monday | மாசி | 22 | 7.00p.m. – 8.00p.m. |
| 06.03.2012 | Tuesday | மாசி | 23 | **Joint Prayer –** கூட்டு வழிபாடு - 7.30p.m. – 9.00p.m. |
| 07.03.2012 | Wednesday | மாசி | 24 | 7.00p.m. – 8.00p.m. |
| 08.03.2012 | Thursday | மாசி | 25 | Joint Prayer– பௌர்ணமி – "1008 போற்றி மலர்கள்" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு 7.30p.m. – 9.00p.m. |
| 09.03.2012 | Friday | மாசி | 26 | 7.00p.m. – 8.00p.m. |
| 10.03.2012 | Saturday | மாசி | 27 | 7.00p.m. – 8.00p.m. |
| 11.03.2012 | Sunday | மாசி | 28 | **Joint Prayer –** "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு **6.00p.m. – 8.30p.m.** |
| 12.03.2012 | Monday | மாசி | 29 | 7.00p.m. – 8.00p.m. |
| 13.03.2012 | Tuesday | மாசி | 30 | **Joint Prayer –** கூட்டு வழிபாடு - 7.30p.m. – 9.00p.m. |
| 14.03.2012 | Wednesday | பங்குனி | 01 | 7.00p.m. – 8.00p.m. |
| 15.03.2012 | Thursday | பங்குனி | 02 | 7.00p.m. – 8.00p.m. |
| 16.03.2012 | Friday | பங்குனி | 03 | 7.00p.m. – 8.00p.m. |
| 17.03.2012 | Saturday | பங்குனி | 04 | 7.00p.m. – 8.00p.m. |
| 18.03.2012 | Sunday | பங்குனி | 05 | **Joint Prayer –** "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு **6.00p.m. – 8.30p.m.** |
| 19.03.2012 | Monday | பங்குனி | 06 | 7.00p.m. – 8.00p.m. |
| 20.03.2012 | Tuesday | பங்குனி | 07 | **Joint Prayer –** கூட்டு வழிபாடு - 7.30p.m. – 9.00p.m. |
| 21.03.2012 | Wednesday | பங்குனி | 08 | 7.00p.m. – 8.00p.m. |
| 22.03.2012 | Thursday | பங்குனி | 09 | அமாவாசை~ "1008 போற்றி மலர்கள்"மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு 7.30p.m. – 9.00p.m. |
| 23.03.2012 | Friday | பங்குனி | 10 | 7.00p.m. – 8.00p.m. |
| 24.03.2012 | Saturday | பங்குனி | 11 | 7.00p.m. – 8.00p.m. |
| 25.03.2012 | Sunday | பங்குனி | 12 | **Joint Prayer –** "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு **6.00p.m. – 8.30p.m.** |
| 26.03.2012 | Monday | பங்குனி | 13 | 7.00p.m. – 8.00p.m. |
| 27.03.2012 | Tuesday | பங்குனி | 14 | **Joint Prayer –** கூட்டு வழிபாடு - 7.30p.m. – 9.00p.m. |
| 28.03.2012 | Wednesday | பங்குனி | 15 | 7.00p.m. – 8.00p.m. |
| 29.03.2012 | Thursday | பங்குனி | 16 | 7.00p.m. – 8.00p.m. |
| 30.03.2012 | Friday | பங்குனி | 17 | 7.00p.m. – 8.00p.m. |
| 31.03.2012 | Saturday | பங்குனி | 18 | 7.00p.m. – 8.00p.m. |

# Melbourne - Mandrams – Upcoming Events – March 2012

## Vermont South

### Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram

**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133
(Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 02.03.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 03.03.2012 | SATURDAY- சனி | 7.30p.m. – 9.30p.m. | ஆன்மிககுரு அருள்திரு அம்மாவின் 72 ஆவது அவதாரத் திருநாள் பாத பூஜை, கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 08.03.2012 | THURSDAY- வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 09.03.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.03.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.03.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.03.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Lalor

**Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 11.03.2012 | SUNDAY - ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.03.2012 | SUNDAY - ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Mulgrave

### Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

**Joint Prayers: Every Sunday**

| | | | |
|---|---|---|---|
| 03.03.2012 | Saturday | 03.00 p.m. – 06.05 p.m. _ | ஆன்மிககுரு அருள்திரு அம்மாவின் 72ஆவது அவதாரத்திருநாள் பெருவிழா<br>கலச – விளக்கு வேள்விப்பூஜை<br>பாத பூஜை, கூட்டு வழிபாடு, கலை நிகழ்ச்சிகள் |
| 04.03.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 11.03.2012 | Sunday | 09.00a.m. 06.10p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>"Thiru Vilakku Pooja" – "திருவிளக்குப் பூஜை" |
| 18.03.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 25.03.2012 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |

# அருள்திரு அம்மாவின் 72ஆவது அவதாரத்திருநாள்

**இ**ன்றைய கலியுகத்தில் இலட்சக்கணக்கான பக்தர்களாலும் செவ்வாடைத் தொண்டர்களாலும் 'அம்மா' என்று பாசமுடன் அழைக்கப்படும் அருள்திரு அம்மாவின் திருமேனியை வயப்படுத்தி அன்னை ஆதிபராசக்தி நிகழ்த்தும் அற்புதங்கள் ஆயிரம் ஆயிரம்.

அருள்திரு அம்மா அவர்கள் மானிட வாழ்க்கையில் அவரையும் அறியாமல் அன்னையின் ஆன்மாவால் ஆட்கொள்ளப்பட்டு பங்காருவாகத் தோன்றி ஆசிரியர், சித்தர், அடிகளார், ஆன்மிககுரு, அம்மா, தெய்வம் என்ற ஆறு நிலைகளுக்கு மாறி, அவர் நிகழ்த்தும் அற்புதங்களின் வாயிலாகத் தான் காட்டும் நன்னெறியில் செல்ல இலட்சக்கணக்கான உள்ளங்களைப் பக்குவப்படுத்தியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் அன்னையின் துணை ஆலயங்களான 5000இற்கும் மேற்பட்ட வார வழிபாட்டு மன்றங்களிலும் சக்தி பீடங்களிலும் அம்மாவின் அவதாரத்திருநாள் வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

நாமும் அவதாரத் திருநாளில் அருகிலுள்ள வழிபாட்டு மன்றங்களுக்குச் சென்று பங்கு கொண்டு குருவின் திருவடிக்கு பாதபூஜை செய்து குருவின் குருவருளையும் அன்னையின் திருவருளையும் பெறுவோமாக.

## குரு சேவையும் பக்தியும்

அடிகளார் அபிமானம் என்பது வேறு ஒன்றும் இல்லை. நீ செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. நீ அடிகளார் அபிமானத்திற்குப் பாத்திரமாய் இருந்தால் போதும். அந்த எண்ணம் உனக்கு மோட்சத்தைக் கொடுக்கும். அடிகளாரை நினைத்துக்கொண்டு இருந்தாலே போதும். அடிகளாரை நினைக்கும்போது, அந்த நினைவில் தோன்றும் அடிகளாரின் பார்வை பட்டாலே போதும். அம்மா அளித்த விளக்கம் இது. அம்மா சிறந்த முறையைக் காட்டிவிட்டார்கள்.

குரு சேவை என்பதற்கு அன்னை அளித்த விளக்கம்:
**குரு சேவை 4 வகை உண்டு.**

| | |
|---|---|
| ஆப்தம் | அடிகளாருக்கு அனுகூலமானவற்றைச் செய்தல் |
| அங்கம் | அடிகளாருக்கு பணிவிடை செய்தல் |
| ஸ்தானம் | அடிகளார் நிறுவியுள்ள அறநிலை, வழிபாட்டு மன்றம் முதலியவற்றைப் பாதுகாத்துப் போற்றுதல். |
| சற்பாவம் | அடிகளாரே மெய்யான பரம்பொருள் என்று நம்புதல் |

ஒருவரது ஆன்ம முன்னேற்றத்திற்கு குரு ஒருவர் தேவை என்பது சாத்திரங்கள் வலியுறுத்தும் உண்மை. குருவின் துணையின்றி எவரும் ஆன்மிகத்தில் உச்சகட்டங்களை அடைய முடியாது. குருவின்றி இறையறிவை பெறுவது சாத்தியம் இல்லை. குருவும் கடவுளும் ஒன்றே. அவரை மனிதனாக கருதாதே. தெய்வ விக்கிரகத்தை வெறும் கல் என்று எண்ணாதே. குருவை சாதாரணமான மனிதன் என்று எண்ணாதே. மந்திரங்கள் வெறும் வார்த்தை தானே என்று நினைக்காதே. குருவின் மூலமாகவே இறைவன் பேசுகிறான்.

குருவின் அருளைப் பெறுவதற்கு அவருடைய நாமத்தை எப்போதும் ஜெபித்தபடியும் தியானித்தபடியும் இருக்க வேண்டும். அந்தத் தியானம் அவர் அருளுக்கு வழி வகுக்கும். அந்த அருள் ஆத்ம அனுபவங்கட்கு வழி வகுக்கும். உண்மையான ஆர்வம் இருக்குமானால் - ஒருவன் விழித்துக்கொண்டால் இறைவன் சீடனிடம் கருணை கொண்டு குருவோடு தொடர்பு கொள்ளச் செய்துவிடுகிறான்.

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்)

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## நீ தேடும் பொருளின் கூடு அழியவில்லை

ஈரோடு மாவட்டம், புஞ்சை புளியம்பட்டி அருகேயுள்ள ஊர் கும்மக்காளிப்பாளையம். அந்த ஊரைச் சேர்ந்த குமாரசாமி சாதாரண ஏழை விவசாயி. வருடந்தோறும் திருப்பதி சென்று வழிபட்டு வந்தவர்.

சரியாக விவசாயம் செய்ய முடியாதபடி நிலத்தகராறு, கடன் தொல்லைகள், கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்கப் போய் அதனால் ஏற்பட்ட சண்டை சச்சரவுகள். இவ்வாறு பல பிரச்சனைகளின் அழுத்தம் காரணமாக மன நிம்மதியை இழந்து ஒரு சோதிடரை நாடினார்.

### ஏழரை நாட்டுச் சனி

“உனக்கு இப்போது ஏழரை நாட்டுச் சனி நடக்கிறது. உன் மூத்த பிள்ளை ஜாதகப்படி பூர்வீகமான இடம் சரிப்படாது. இருப்பிடத்தை மாற்றிக்கொண்டு வாழ்க்கை நடத்துங்கள்” என்று கூறினார் சோதிடர். இடம் பெயர முயன்றபோது பயன் கிடைக்கவில்லை. நிலத்தகராறு காரணமாக அடிக்கடி காவல் நிலையம், வழக்கு என்று அலைய வேண்டியிருந்தது.

### மகனைக் கடிந்து பேசியது

ஒரு நாள் அவரது மூத்த மகன் வண்டியை ஓட்டி வந்தபோது வண்டி கவிழ்ந்து அதிர்ச்சியாய் நின்றான். தற்செயலாக அந்த வண்டி கவிழ்ந்துவிட்டதென்ற உண்மை புரியாமல் குமாரசாமி, மகனைத் திட்டி விட்டார். என் முகத்திலேயே விழிக்காதே! போடா! என்று கூறிவிட்டார்.

அவனோ, ரோஷத்தோடு அன்று உடுத்தியிருந்த கந்தல் துணியோடும் அழுக்கடைந்த பனியனோடும் வீட்டை விட்டுப் போனவன் போனவனே!

### புதிய கவலை

அன்று ஆடி மாதம் 3ஆம் நாள், வெள்ளிக்கிழமை. அம்மனுக்குப் பொங்கல் வைத்துப் படைப்பது அவர் குடும்பத்து வழக்கம். உறவுக்காரர்களையெல்லாம் அழைத்தார் குமாரசாமி. அந்த விசேட நிகழ்ச்சிக்காவது மகன் வந்து சேருவான் என்று எதிர்பார்த்தார். வந்த பாடில்லை. பழைய கவலைகளோடு இப்போது மகனைப் பற்றிய புதிய கவலையும் சேர்ந்து கொண்டது.

மகனைப் பிரிந்து நிம்மதியாக இருக்க முடியவில்லை. அங்கங்கே சோதிடம், மாந்திரீகம், பூசாரி, மந்திரவாதிகள் எனக் கண்ட இடமெல்லாம் அலைந்து ஆயிரக்கணக்கில் செலவானதுதான் மிச்சம்.

### புளியம்பட்டிக்கு அடிகளார் வருகை

புஞ்சை புளியம்பட்டிக்கு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்திலிருந்து அருள்திரு அடிகளார் அவர்கள் வருவதாகவும், அங்கே ஒரு வார வழிபாட்டு மன்றம் திறக்க இருப்பதாகவும் கேள்விப்பட்டார். மேல்மருவத்தூர் அன்னையின் பெருமைகளைக் கேட்டறிந்தார்.
மேல்மருவத்தூர் சென்றாலாவது பிரச்சனை தீருமா? மகன் கிடைப்பானா? என எண்ணி மேல்மருவத்தூர் வந்தார்.

### அன்னையிடம் அருள்வாக்கு

முதன்முதல் அன்னையின் முன் அமர்ந்து அருள்வாக்கு கேட்டார்.
“மகனே! நீ தேடுகிற பொருளின் கூடு அழியவில்லை. அருள் கொடுத்து உன் மகனை வரவழைக்கிறேன். அருள் கொடுத்து வாழ வைக்கிறேன். உனக்குச் செல்வம் தருகிறேன். வேறென்ன வேண்டும் கேள்!” என்றாள் அன்னை.
“தாயே! உன் அருள்தான் வேண்டும்” என்று வேண்டினார் குமாரசாமி.
“உத்தரவு” என்று கூறியனுப்பிவிட்டாள் அன்னை.

(தொடர்ச்சி…11ஆம் பக்கம்)

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!

ஆதிபராசக்தி சித்தர் பீடம்


மேல்மருவத்தூர்



2012

ஸ்ரீ கர - ஸ்ரீ நந்தன வருடம்

# ஆலய சிறப்பு விழாக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மாசி | 20 | 03.03.2012 | சனி |  ஆன்மிக குரு அருள்திரு அம்மா அவர்களின் 72ஆவது அவதாரத் திருநாள் |
| மாசி | 25 | 08.03.2012 | வியாழன் | பௌர்ணமி |
| பங்குனி | 9 | 22.03.2012 | வியாழன் | அமாவாசை - வேள்வி |
| பங்குனி | 24 | 06.04.2012 | வெள்ளி | பௌர்ணமி |
| சித்திரை | 8 | 20.04.2012 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| சித்திரை | 23 | 05.05.2012 | சனி | சித்திரை பௌர்ணமி |
| வைகாசி | 7 | 20.05.2012 | ஞாயிறு | அமாவாசை - வேள்வி |
| வைகாசி | 22 | 04.06.2012 | திங்கள் | பௌர்ணமி |
| ஆனி | 05 | 19.06.2012 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| ஆனி | 19 | 03.07.2012 | செவ்வாய் | பௌர்ணமி |
| ஆடி | 03 | 18.07.2012 | புதன் | அமாவாசை - வேள்வி |
| ஆடி | 07 | 22.07.2012 | ஞாயிறு | 41ஆவது ஆடிப்பூரம் |
| ஆடி | 08 | 23.07.2012 | திங்கள் | 41ஆவது ஆடிப்பூரம் |
| ஆடி | 17 | 01.08.2012 | புதன் | பௌர்ணமி |
| ஆவணி | 01 | 17.08.2012 | வெள்ளி | அமாவாசை - வேள்வி |
| ஆவணி | 15 | 31.08.2012 | வெள்ளி | பௌர்ணமி |
| ஆவணி | 30 | 15.09.2012 | சனி | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 13 | 29.09.2012 | சனி | பௌர்ணமி |
| புரட்டாசி | 29 | 15.10.2012 | திங்கள் | அமாவாசை - வேள்வி |
| புரட்டாசி | 30 | 16.10.2012 | செவ்வாய் | நவராத்திரி ஆரம்பம் |
| ஐப்பசி | 13 | 29.10.2012 | திங்கள் | பௌர்ணமி |
| ஐப்பசி | 28 | 13.11.2012 | செவ்வாய் | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 13 | 28.11.2012 | புதன் | பௌர்ணமி – கார்த்திகை தீபம் |
| கார்த்திகை | 27 | 12.12.2012 | புதன் | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 28 | 13.12.2012 | வியாழன் | அமாவாசை |
| மார்கழி | 11 | 25.12.2012 | செவ்வாய் | கிறிஸ்மஸ் |
| மார்கழி | 14 | 28.12.2012 | வெள்ளி | பௌர்ணமி |

## அருள்வாக்கும் அனுபவங்களும்

### மறுமுறை அருள்வாக்கு

மீண்டும் ஒரு முறை மேல்மருவத்தூர் வந்தார். வழியில் அவர் வைத்திருந்த பணத்தை யாரோ களவாடிவிட்டார்கள். கண்டக்டர் டிக்கெட் பணம் கேட்டபோதுதான் பணம் தொலைந்துபோன விவரம் தெரிந்தது. வண்டியிலிருந்த சிலர் அவருடைய பரிதாப நிலையைப் பார்த்து உதவி செய்ய, மேல்மருவத்தூர் வந்து சேர்ந்தார்.

### வீண் செலவு வேண்டாம்

“இந்த முறை அன்னை, “மகனே! வழிப்பறி கொடுத்துவிட்டு வந்து நிற்கிறாய். இனி நீ உன் மகனைத் தேடி அலைய வேண்டாம். வீண் செலவு செய்ய வேண்டாம். நிறைய தருமம் செய்யடா மகனே! நிறையத் தொண்டு செய்யடா மகனே! அடுத்த முறை இங்கு வரும்போது உன் மனைவியை அழைத்துக்கொண்டு வாடா மகனே!” என்றாள். அவர் மனைவிக்கு நீண்ட நாட்களாக உடல் நலம் சரியில்லை. அது கருதியே அன்னை தன் சந்நிதிக்கு அழைத்து வரச் சொல்கிறாள் என்று எண்ணினார் குமாரசாமி.

### மனைவிக்கும் கணவனுக்கும் கூறியது

அடுத்த முறை வரும்போது மனைவியையும் அழைத்துக்கொண்டு அருள்வாக்கு கேட்கப் போனார் குமாரசாமி. அவர் மனைவியை நோக்கி “மகளே! வெள்ளாட்டுப்பால், கொடி வேர்க்கடலை, பனங்கற்கண்டு மூன்றும் சேர்த்துத் தினமும் சாப்பிடு! உடல்நலம் சீரடையும்” என்றாள்.

குமாரசாமி பக்கம் திரும்பி “மகனே! உனக்கு நிறைய கஷ்டங்கள் தருகிறேன். அனுபவித்துக்கொள்! உன் மகன் வந்த பிறகு அருள்பாலிக்கிறேன். உத்தரவு” என்றாள் அன்னை.

“மகன் இருக்குமிடத்தைச் சொல்லம்மா…” என்று வேண்டினார் குமாரசாமி. “உனக்கேன் அந்தக்கவலை? அவனை உன்னிடம் சேர்ப்பது என் பொறுப்பு” என்றாள் அன்னை.

### ஆறாண்டுகள் ஓடிவிட்டன

மகன் இருக்குமிடம் தெரியாமல் அவனைப் பிரிந்து ஆறாண்டுகள் ஓடிவிட்டன.
“நான் தரும் கஷ்டங்கள் அனைத்தையும் அனுபவித்துக்கொள்” என்கிறாள்.
“மகன் உயிருடன்தான் இருக்கிறான்” என்கிறாள்.
“அவனைத் தேடிக் கண்டுபிடிக்க வீண் செலவு செய்யாதே” என்கிறாள்.
“மகன் வந்த பிறகு அருள்பாலிக்கிறேன்” என்கிறாள்.
அவன் இருக்குமிடத்தையும் சொல்லாமல், “நீ தொண்டு செய்! நிறைய தருமம் செய்” என்கிறாள்.

இதற்கு மேலும் அன்னையிடம் துருவித் துருவிக் கேட்க குமாரசாமிக்கு தைரியம் வரவில்லை. அவற்றுக்குப் பின்னால் இருக்கும் காரணம் என்னவென்று அவருக்குத் தெரியவில்லை. ஆயினும் அன்னையின் மேல் வைத்த நம்பிக்கையும் விட்டுவிடவில்லை.

### கேலி கிண்டல் வதந்திகள்

அவர் மகனைப் பற்றி ஊரிலும் உறவிலும் பலவிதமான வதந்திகள் பரவின.
பதினொரு முறை அன்னையிடம் வந்து அருள்வாக்கு கேட்டுவிட்டார்.
பாதயாத்திரையாக நான்கு முறை வந்தார். சைக்கிள் மூலம் ஆன்மிகப் பயணம் வந்தார். நான்கு சக்தி பீடக் கும்பாபிடேகங்களில் கலந்துகொண்டு தொண்டு செய்தார். மேல்வருவத்தூர் சித்தர் பீடத்து விழாக்களிலும், ஆன்மிக மாநாடுகளிலும் கலந்துகொண்டு தொண்டு செய்தார்.

(தொடர்ச்சி…13ஆம் பக்கம்)

# ஆன்மிக நாட்குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 03.03.2012 | சனி | மாசி | 20 | **அருள்திரு அம்மா அவர்களின் 72ஆவது அவதாரத்திருநாள்** |
| 07.03.2012 | புதன் | மாசி | 24 | மாசிமகம் |
| 08.03.2012 | வியாழன் | மாசி | 25 | **பௌர்ணமி தினம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 11.03.2012 | ஞாயிறு | மாசி | 28 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 22.03.2012 | வியாழன் | பங்குனி | 09 | **அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 23.03.2012 | வெள்ளி | பங்குனி | 10 | யுகாதி தெலுங்கு வருடப்பிறப்பு |
| 31.03.2012 | சனி | பங்குனி | 18 | ஸ்ரீ இராமநவமி |
| 05.04.2012 | வியாழன் | பங்குனி | 23 | பங்குனி உத்திரம் |
| 06.04.2012 | வெள்ளி | பங்குனி | 24 | **பௌர்ணமி தினம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 08.04.2012 | ஞாயிறு | பங்குனி | 26 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 13.04.2012 | வெள்ளி | சித்திரை | 01 | தமிழ் வருடப்பிறப்பு |
| 20.04.2012 | வெள்ளி | சித்திரை | 08 | **அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 05.05.2012 | சனி | சித்திரை | 23 | **சித்திரை பௌர்ணமி**<br>**பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 20.05.2012 | ஞாயிறு | வைகாசி | 07 | **அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 04.06.2012 | திங்கள் | வைகாசி | 22 | **பௌர்ணமி தினம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 05.06.2012 | செவ்வாய் | வைகாசி | 23 | வைகாசி விசாகம் |
| 10.06.2012 | ஞாயிறு | வைகாசி | 28 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்போர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 19.06.2012 | செவ்வாய் | ஆனி | 05 | **அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 18.07.2012 | புதன் | ஆடி | 03 | ஆடி அமாவாசை |
| 23.07.2012 | திங்கள் | ஆடி | 08 | ஆடிப்பூரம் |
| 02.08.2012 | வியாழன் | ஆடி | 18 | ஆடிப்பெருக்கு |
| 09.08.2012 | வியாழன் | ஆடி | 25 | கோகுலஷ்டமி |

# Brisbane – Mandram – Upcoming Events – March 2012



ஓம் சக்தி!

**Melmaruvathur Aadhiparasakthi Brisbane Mandram**
**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பிரிஸ்பேர்ண் மன்றம்**

P.O.Box: 750, SumnerPark, BC, Qld 4074



"Service and Devotion are the Eyes of Spirituality"
"Spirituality is knowing, understanding and realizing Thyself" – **Melmaruvathur Amma's Oracle.**

**03.03.2012**
**Sunday**
சனிக்கிழமை – மாசி 20

**Bajan:**
**5.00p.m to 7.00p.m.**

**கூட்டுப்பிரார்த்தனை:**
மாலை 5.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை

பங்காரு அடிகளார் பிறந்தநாள்

**1 Lalina Street - Middle Park, – Qld 4074**

Contacts:

Sakthi Para
Mob: 0438 778 483

Sakthi Thilaga Vijeyakumar
07-38234628

Sakthi Kalyanasundaram
0411165067

நன்மைகள் விளைய நன்மைகள் செய்வோம் – நமக்கென உளதை பிறர்க்கும் கொடுப்போம்

## அருள்வாக்கும் அனுபவங்களும்

### நம்பியூர் தொண்டர் ஒருவர் கொடுத்த தகவல்

ஒருநாள் நம்பியூர் தொண்டர் ஒருவர் "உன் மகனைப் போலவே நான் அந்த ஊர்ப் பக்கம் பார்த்தேன். உன் மகன்தான் என்று நினைக்கிறேன். போய்த் தேடிப்பார்." என்றார்.
அன்னையிடம் அருள்வாக்கு கேட்டுவிட்டு அவனைத் தேடுகிற முயற்சியில் இறங்கலாம் எண்றெண்ணி மருவத்தூர் வந்தார்.
"அம்மா காணாமற்போன மகன் பற்றிய தகவல் கிடைத்திருக்கிறது" என்றார் குமாரசாமி.
"நான் என்னடா சொன்னேன்?" என்று திரும்பிக் கேட்டாள் அன்னை.
"நீ தேட வேண்டாம், வீண் செலவு செய்யாதே1 என்றாய் அம்மா" என்று பதிலளித்தார் அவர்.
"பிறகு ஏன் தேடுகிறாய்? உன் மகன் நன்றாகத்தான் இருக்கிறான். உத்தரவு" என்றாள் அன்னை.
"எங்கள் ஊரில் உள்ளவர்கள் என் மகனைப்பற்றித் தவறான வதந்திகளைப் பரப்புகிறார்களே தாயே…?" என்றார் இவர்.
"உன் மகன் செத்துப்போய்விட்டான் என்றுகூடப் பேசுவார்கள் மகனே! அவர்கள் சொல்லிவிட்டுப் போகட்டும். மகன் வந்த பிறகு உன் சிக்கல் தீரும். விவசாயம் செய்யலாம். நீ வேஷம் போட்டுக்கொண்ட சாமியார் போல நடிக்கிறாய் என்று பேசுகிறார்கள். பேசிவிட்டுப் போகட்டும் மகனே! உத்தரவு" என்று சொல்லிவிட்டாள். அன்னை.

### ஆடிப்பூர விழாவில் தொண்டு

1986ஆம் ஆண்ட நடைபெற்ற அடிப்பூர விழாவின்போது மேல்மருவத்தூர் வந்து தொண்டு செய்துவிட்டு ஊர் திரும்பினார் குமாரசாமி.
அங்கே ஆறாண்டுகளுக்கு முன்பு காணாமற்போன மகன் வீட்டுக்கு வந்திருந்தான். பார்த்துப் பிரமித்துப்போனார் குமாரசாமி.
இத்தனைக்கும் அவன் வெகுதூரம் எங்கோ ஓடிவிடவில்லை. அவர் ஊருக்கு 50 கி.மீ. தொலைவிலுள்ள அன்னூர் என்ற ஊரில் பேருந்து ஓட்டுநராக வேலை செய்து இருக்கிறான். அவ்வளவு அருகிலிருப்பவனைப் பற்றி ஆறாண்டுகள் தெரியவில்லை என்பது ஓர் ஆச்சரியம்!.

***

# திருமதி அம்மா பதில்கள்



இலட்சுமி பங்காரு அடிகளார்

**அம்மா, கிருஸ்துவ, இஸ்லாமிய கோவில்களில் பக்தர்கள் மிக அமைதியாக வழிபடுவதால், அங்கு சென்றாலே மனம் ஒருநிலைப்படுகிறது. நமது சித்தர் பீடத்தில் கூட (குரு) அம்மா அவர்களைத் தரிசனம் செய்யும்போதும் ஒருமாபெரும் அமைதியும் ஆனந்தமும் நிலவுகிறது. ஆனால் மற்ற சமயங்களில் ஒரே சத்தமாக உள்ளதே! இதை ஒழுங்குப் படுத்த முடியுமா..? தயவு செய்து பதில் கூறுங்கள் அம்மா!**

எனக்கும் நீண்ட நாட்களாக இதே ஆதங்கம்தான். நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நான் சொன்னால் திருமதி அம்மா கோபக்காரி என்கிறார்கள். அம்மா ஆலயத்தை வலம் வரும்போது அமைதியாக இருந்த இடத்தில் இருந்தே நின்று இருகரம் கூப்பி அல்லது இருந்த இடத்திலேயே விழுந்து வணங்கலாம். கூட்டத்தில் முண்டி அடித்துக்கொண்டு அம்மாவின் அம்மாவின் பாதத்தைத்தொட முயற்சித்து இடிபாடுகளில் சிக்கி, பெண்கள், குழந்தைகள் என்று இல்லாமல் மிதிபட்டுப் படாதபாடு படுகிறார்கள். பாதுகாவலர்கள்தான் இதற்குக் காரணம் என்று பக்தர்கள் நினைக்கிறார்கள். பக்தர்கள்தான் ஆர்வம் காரணமாகக் கூட்டத்தையும் நெரிசலையும் பற்றிக் கவலைப்படாமல் அம்மாவின் பாதத்தைத் தொட முயற்சிக்கிறார்கள். இதனால் சத்தம் அதிகமாகிறது. எவ்வளவோ முறை நானும் அம்மாவும் கூட்டத்தில் திணறி இருக்கிறோம். எவ்வளவு ஒழுங்காக, அமைதியாகக் கட்டுப்படுத்தி வைத்திருந்தாலும் அம்மா வரும்போது பக்தர்கள் கட்டுப்பாட்டை மீறிவிடுகிறார்கள். ஆரம்பத்திலிருந்து முஸ்லிம்களும், கிருஸ்துவர்களும் ஆலயத்திற்கு வந்தால் அமைதியாக வழிபாடு செய்ய வேண்டும். ஆலயத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற பழக்கத்திற்கு வந்துவிட்டார்கள். நாம் கத்தி ஆரவாரம் செய்தே வழிபாடு செய்யப் பழகிவிட்டோம். பக்தர்கள் தாங்களாகவே கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டால்தான் இந்த நிலை மாறும்.

குறிப்பு:

**மேற்படி கேள்வி-பதில் திருமதி அம்மா அவர்களினால் “திருமதி பதில்கள்” என்ற நூலினில் 2005ஆம் ஆண்டு முதற்பதிப்பின்போது தெரிவிக்கப்பட்ட பதில்களாகும்.**
**ஆனால், தற்போது நிலைமை திருமதி அம்மாவின் ஆதங்கத்திற்கேற்பவே பக்தர்களின் அமைதியைக் கடைப்பிடிக்கும் நிலை மேலோங்கிவருவது கண்கூடு. பாதுகாவலர்கள் மிகுந்த சிரத்தையுடன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து ஒழுங்கிணை திறம்பட மேற்கொள்கிறார்கள்.**
**ஆன்மிககுரு அருள்திரு அம்மா ஆலயத்திற்கு எழுந்தருளியவுடன் ஆலயத்திற்குள் நிற்கும் பக்தர்கள் அந்தந்த இடங்களிலேயே அமர்ந்து குருவின் வருகைக்காக காத்திருக்கும் அந்தக்கணம் குண்டுமணி விழுந்தால்கூட உயர்ந்த அலை வீச்சாக கேட்கும் அளவுக்கு அமைதி நிலவுகிறது. பக்தர்களின் முகங்களில் ஆனந்தக் கண்ணீரும், ஏக்கங்களுமே தெரிவது காணக்கூடியதாய் இருக்கிறது. தற்போது மருவத்தூர் ஆலயம் செல்பவர்கள் அனுபவங்களில் கேட்டறியலாம். நேரடியாக ஆலயம் செல்பவர்கள் இதனை உணரும் வாய்ப்பை பெறுவீர்கள் என்பது சத்தியம்.** ***

# Sydney - Mandrams - Upcoming Events – March 2012

## □□□ Homebush

### Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre

Contact: 02-97643872, 0416217317

**Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 02.03.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 03.03.2012 | SATURDAY- சனி | 6.30p.m. – 9.30p.m. | ஆன்மிககுரு அருள்திரு அம்மாவின் 72 ஆவது அவதாரத் திருநாள் பாத பூஜை, கூட்டு வழிபாடு கலை நிகழ்ச்சிகள் **Spiritual Guru Arulthiru Amma's 72nd Avatharath Thirunaal** Patha pooja-Joint Prayer-Cultural Performances |
| 08.03.2012 | THURSDAY- வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 09.03.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.03.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.03.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.03.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## □□□ Westmead

### Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW (Australia)

Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street - Westmead

| | | | |
|---|---|---|---|
| 02.03.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 03.03.2012 | SATURDAY- சனி | 6.30p.m. – 9.30p.m. | ஆன்மிககுரு அருள்திரு அம்மாவின் 72 ஆவது அவதாரத் திருநாள் பாத பூஜை - கூட்டு வழிபாடு கலை நிகழ்ச்சிகள் **Spiritual Guru Arulthiru Amma's 72nd Avatharath Thirunaal** Patha pooja-Joint Prayer-Cultural Performances |
| 08.03.2012 | THURSDAY- வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja "பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 09.03.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.03.2012 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 23.03.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.03.2012 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

# Divine Miracles at Melmaruvathur

## Peace, which was not got even after reading Vedanta:

Sri Govindswamy belonged to a monastery known as Ponnambala Swami Monastery. He had lost his parents in his childhood. Fear and anxiety enveloped him from childhood. He used to shed tears thinking of God. His own family members were rude to him and behaved with irritation. He was frustrated with life and he left home. He learnt Vedanta along with the sanyasis who belonged to the Kovilur Monastery at Ramanathapuram in the south. He did not get peace of mind. He stayed in several monasteries. He went to Kasi and Rishikesh. He learnt Hindi and read devotional books and books of knowledge. Still he did not get peace. Finally he returned to Tamil Nadu. He put up at several monasteries and taught Vedanta. He was troubled by the heads of the monasteries and he was still disturbed. He came to Melmaruvathur and attended the divine revelation. Mother told him to read the '108 praises' and the '1008 praises' and chant the mantra daily. He could derive peace of mind only after he started chanting the mantras.

## I have chosen you for the 'abishekam' in the month of 'Thai':

At Vaniyampadi Sakthi Peetam on Wednesday, the 8th of April in the year 1992, 'Kudamulukhu' was celebrated. There were spiritual discourses after the ceremony. Several devotees lectured. Sri Sakthi Periyandavan who had worked as Director in the Department of Development of Tamil, spoke about his experiences with Mother in his lecture. He said, "I came to Mother in the year 1974 and at that time fixing up of sponsors for Adi Pooram, Nava Rathri, Thai Poosma had been finalised. Even those who were to perform 'Pournami' (full moon) poojas had been fixed. Only those who had to do abishekam on Amavasya (New moon) days had not been selected. One day when I had gone to Mother for Her divine revelations with my wife, she told me many relevant matters for my family and then said, "I have given you the abishekam for Amavasya". When I came out and remarked to my wife that Mother had voluntarily made me sponsor for Amavasya abishekam, she jokingly said, "Did you think that She would make you sponsor for the Pournami abishekam?" Somehow she thought that Pournami abishekam was better than Amavasya abishekam. Suddenly, I also felt that it would have been better if I had the Pournami abishekam! Suddenly there was a call for me from inside and I went inside and sat at the place where divine revelations were being spoken. Mother said, "Son! I have chosen the Amavasya in the month of Thai for you, do you understand?" I merely said that I understood and came out. My wife wanted to know why I had been called. I told her with some pride and exultation the Thai Amavasya had been reserved for me. My wife argued, "An Amavasya is an Amavasya even if it is in the month of Thai. What is there to be proud of?"

It is believed that Thai Amavasya is equivalent to Pournami! The story is that Mother had thrown Her ear-ring and converted an Amavasya into a full moon day for the sake of Abhirama Bhattar. That was the reason Mother had asked me, "Do you understand?" I told my wife, "I have understood. I hope that you also understand". My wife became reconciled only after this. There are only twelve Pournami's in a year but the Thai Amavasya is considered to be the 13th Pournami by the devotees of Mother. We have two daughters. I did not feel for not having a son. My wife obviously missed a son. Mother had told my wife sixteen years ago that She would grant her a son. Ten years had passed. My daughters had been married and we had grandchildren. My wife felt that Mother had given her a false promise regarding a son.

In 1992 Mother had spoken to us as sponsors of the Thai Amavasya. She told my wife, "Daughter! You fed your children and whenever you did, so what did you tell them? Did you not show them the moon and tell them that you would get it for them if they ate their food? Did you give them the moon? Did you not feel that the children should be made to eat somehow? Isn't it my promise also like that? I wanted to give you spiritual food by promising a son. You have not plucked the moon nor have I given you a son. You were interested in feeding your child and I as your mother was interested in somehow feeding your spirituality."

Mother's intentions and methods are different from ours. We should not think that She does not have compassion for us if She does not give us what She promised. A Mother does not give her child everything it wants. She sometimes gives bitter pills to the child forcibly to save the child from disease. Similarly Mother gives sweets as bitter pills to Her children.

***

## அருள்திரு அம்மாவின் 72ஆவது அவதாரத்திருநாள்....

(8ஆம் பக்க தொடர்ச்சி)

தம்மைச் சரணடைந்தவர்களைப் பக்குவப்படுத்தி அவர்கட்கு ஞானம் ஊட்டுவதற்காகக் குரு மேற்கொள்ளும் செயல்களில் தீட்சை என்பது முக்கியமானது. இந்தத் தீட்சைகள் மூலமாகவே குரு தம் அருள் சக்தியைச் சீடர்களுக்குப் பாய்ச்சுகின்றார். தீட்சை என்பதற்கு ஆன்மாவைச் சூழ்ந்த அழுக்கை நீக்கி ஞானம் புகட்டுதல் என்று பொருள். தீட்சை ஏழு வகை உண்டு.

குருவருள் பெற்று ஞானம் அடைந்தோர் பலர். **இறைவனே குருவாக வந்து ஞானம் புகட்டிய வரலாறும் உண்டு.**

குரு என்றால் கருவான மூலம் என்ற புதிய பொருளை அன்னை அருளினாள். மூலப்பரம்பொருளே குருவாக வந்துள்ளது என்பதைக் குறிப்பால் உணர்த்தினாள். போதக குரு, வேதக குரு, நிஸித்த குரு, காமிய குரு, சூசக குரு, வாசக குரு, காரக குரு, விசித்த குரு என எட்டு வித குருக்கள் உண்டு. ஆனால், அடிகளார் அனைத்திலும் வேறுபட்டவர் என்ற தெளிவையும் அன்னை வெளிப்படுத்தினாள்.

**லோக குருக்கள் என்பவர்களெல்லாம் என் திருவடியின் சுண்டு விரலின் நக விளிம்பின் ஓரம் உள்ள சிறு அளவு ஞானத்தையே பெற்றுள்ளார்கள். இங்கே இப்போது நானே குருவாக அடிகளார் வடிவாக அவதரித்துள்ளேன் என்று தெளிவுபடுத்தியுள்ளாள்.**

**மனிதப்பிறவிப் பயனை அடையும் வண்ணம் வழிகாட்டி நடத்திச் செல்லும் சான்றோர் 'குரு' எனப்படுகிறார். சிறந்த குரு ஒருவரை பெற்றிட நாம் முற்பிறவிப்பேறு பெற்றிருக்க வேண்டும். எல்லாம்வல்ல பரம்பொருளான அன்னை ஆதிபராசக்தி மானிட உருவில் மேல்மருவத்தூரில் அவதாரமாகி அருள்ஒளி வீசுகிறாள். ஆதிபராசக்தியாகவும் ஆன்மிககுருவாகவும் அருள்திரு பங்காரு அடிகளார் அவர்கள் உலகமெல்லாம் இருந்து வரும் இலட்சக்கணக்கான மக்களுக்கு ஆன்மிக நன்நெறி வழிகாட்டி அருளாசி வழங்கி வருகிறார்.**

மேலும் பஞ்ச கவ்யம் போன்ற 5 வகையான உட்கருத்தும் உண்டு. மன உறுதியுடன் பின்பற்ற வேண்டிய பஞ்ச கவ்வியங்களாவன.

- இதுவரையில் அருள்திரு அடிகளார் அவர்களின் ஆணையை மீறிப் பாவங்களைச் செய்து வந்தேன். இனி அருள்திரு அடிகளார் அவர்கட்கு அனுகூலமான காரியங்களையே செய்வேன்.

- அருள்திரு அடிகளார் அவர்கட்கு இஷ்டமில்லாத காரியங்களைச் செய்ய மாட்டேன்.

- என் துன்பத்தை நீக்கி என்னைக் காப்பாற்ற வல்ல அடிகளாரைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற எண்ணம்.

- நான் அடிகளாரை வழிபட்டால் அவர், என்னைத் தனக்கே உரியதான அன்பால், கருணையால், நிச்சயம் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

- அருள்திரு அடிகளார் என்னைக் காத்து இரட்சிக்க வேண்டும்.

**எவனொருவன் தன் குருவிடத்தில் அசையாத நம்பிக்கை வைக்கிறானோ அவனுக்கு அதுபெரும் சாதனையாக அமைந்துவிடுகிறது. அத்தகைய நம்பிக்கை எளிதில் வந்துவிடாது. நாம் வாழ்கின்ற காலத்திலேயே கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தில் தெய்வமுமாக ஆன்மிககுருவுமாக அவதரித்துள்ள அம்மாவின் வழிகாட்டுதலை சற்றேனும் விலகாது வழிநடப்போமாக.**

**தெய்வமே குருவாக அருள்திரு அம்மாவாக வந்த காரணத்தினால் தாயின் பாசம், தந்தையின் உறுதுணை, குருவின் போதனை, தெய்வத்தின் கருணை ஆகிய அனைத்தும் ஒன்று திரண்டு நமது குருபிரான் மூலம் கிடைக்கின்றது.**

***

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

ஆண்டுச்சந்தா ரூபா ₹ 120.00 (இந்தியா)
ஆயுள் சந்தா ரூபா ₹ 1600.00 (இந்தியா)

வெளிநாட்டுச் சந்தா இந்திய ரூபா ₹ 1500.00 (இரண்டு ஆண்டுகள்)

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.
உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,‘Sakthi Oli’Office, Adhiparasakthi Sithar Peetam,
Melmaruvathur 603319,Tamil Nadu, South India.


## அடிகளார் பிறந்த நாள் விழாவின்போது:

**“அடிகளார் பிறந்த நாளின் போது, பாதபூசை செய்து பாதங்களில் வைக்கப்பட்ட குங்குமத்தை எடுத்து நெற்றியில் வைத்துக்கொள்ளுங்கள்”.**

## அவதார நாடகம்:

**“நீ பாலகன் என்றாலும், ஆசிரியர் என்றாலும், அடிகளார் என்றாலும், குரு என்றாலும், மகான் என்றாலும், அம்மா என்றாலும் யார் எந்த நிலையில் நின்று எப்படிச் சொன்னாலும் எல்லாம் ஒன்றுதான். அவரவர் மனத்துக்கும் எண்ணத்துக்கும் தக்கவாறு இந்த அவதார நாடகம் நடக்கிறது.”**

## குருவின் பிறந்த நாள் விழா:

**“தாய், தந்தை பிறந்த நாள் விழா என்றால் குழந்தைகள் சந்தோஷப்பட வேண்டும்.
குழந்தைகள் பிறந்த நாள் விழா என்றால்
தாய், தந்தையர் சந்தோஷப்பட வேண்டும்.**

**ஆன்மிகத்தில் குருவிற்குப் பிறந்த நாள் என்றால்
பக்தர்கள் சந்தோஷப்பட வேண்டும்.**

**குருவிற்குப் பிறந்த நாள் கொண்டாடுவது
உங்கள் வாழ்வில் மிக முக்கியத்துவம் கொண்டது”.**